Academic Research News
Peer-Reviewed Journal

Volume 1, SPL 1, April 2024 E-ISSN – 2584-167X

# Feminist Thoughts in *Meemozhi* Short Stories

**P. Kavipriya,** Assistant Professor of Tamil, PSG College of Arts and Science, Coimbatore - 641014, Tamil Nadu, India.
ORCiD: https://orcid.org/0009-0002-5452-2878
DOI: 10.5281/zenodo.11191759

## Abstract

*With the change of time, feminism is growing as a theory and movement in a different environment with different thoughts and new concepts. The opinion that feminism has now become a boring talking point is widespread. Even though it has become a boring force, it has not fulfilled its ambition and purpose. To achieve this goal, feminism continues to create new core elements as theory and thoughts, and continues to talk about women's contemporary problems and the reasons for it and who do not have a proper understanding of feminism. In this way, Poet Kutty Revathi, who identified herself as a Radical Feminist, has constructed the female characters of the short stories in other languages as detached from reality and some other characters living the traditional life desired by society. In the Tamil context, where there is no proper understanding of feminism, consistent Feminist theories are emerging as books. In this way, while Feminism has developed as a theory, The article aims to see how contemporary Feminist theoretical thoughts are compatible with Meemozhi short stories and explain new thoughts.*

**Keywords:** Feminism, Thoughts, *Meemozhi*, Short Stories, *Poet Kutty Revathi.*

## References

[1] Kutty Revathi, Meemozhi Short Stories, Writing Publication, Anna Nagar, Chennai- 40, First Edition - 2020.
[2] Dr.T. Vijayalakshmi, Woman - Feminism - Status of Women, Kaalasagam Publishing House, Bharat Nagar, Kottayam Post, Nagercoil- 629 002, First Edition November 2020.
[3] S.Thirugnanasambandam, Source and text of Tholkappiyam, Kathir Publishing House, South Road, Thiruvaiyaru.
[4] V. Nirmala Rani, Gender and Feminism in Tamil Short Stories, Kavya Publishing House, 14, First Cross Road, Trust Puram, Kodambakkam, Chennai - 600024.
[5] S. Krishnamurthy, Tirukkural Old Text, Tamil Nadu Archaeological Survey, Chennai – 600013, First Edition – 1993.
[6] K. Parimalam, Hindu Feminism, Kaviya Publishing House, Chennai - 024, First Edition- 1998.
[7] R. Selvi, Feminist Thoughts, Kavia Publishing House, Kodambakkam Chennai-600024, First Edition – 2010.
[8] R. Prema, The Politics of Women's Writing, Paavai Printers, Chennai - 014, First Edition - December 2007.
[9] R. Prema, Feminist Approaches, Tamil Buddhakalayam, 15, Masilamani Street, Pandi Bazar, Thiagaraya Nagar, Chennai - 600017, First Edition - 1998.
[10] K. Jagatheeswari, Feminist Thoughts in Prapanjan's Novels, PhD Thesis, PSG College of Arts and Science, Coimbatore, September-2002.
[11] www.old.thinnai.com
[12] www.hindutamil.in

**Volume 1, SPL 1, April 2024** **E-ISSN – 2584-167X**

**Author Contribution Statement:** NIL.
**Author Acknowledgement:** NIL.
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.

The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License

Academic Research News

*Peer-Reviewed Journal*



**Volume 1, SPL 1, April 2024** **E-ISSN – 2584-167X**

# *மீமொழி* சிறுகதைகளில் பெண்ணியக் கோட்பாட்டுச் சிந்தனைகள்

**ப. கவிப்பிரியா,** உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, பி. எஸ். ஜி கலை அறிவியல் கல்லூரி, கோவை.
ORCiD: https://orcid.org/0009-0002-5452-2878
**DOI: 10.5281/zenodo.11191759**

**ஆய்வுச்சுருக்கம்**

*கால மாற்றத்தில் பெண்ணியம் மாறுபட்ட சூழலில் , மாறுபட்ட சிந்தனைகளோடும் புதிய கருத்துகளோடும் கோட்பாடாகவும் இயக்கமாகவும் வளர்ந்து வருகிறது. பெண்ணியம் என்பது தற்போது சலிப்படைந்த பேசுபொருளாக மாறிவிட்டதென்ற கருத்து பரவலாக உள்ளது. பெண்ணியம் சலிப்புற்ற கோட்பாடாக ஆனபோதும், அது தன் இலட்சியத்தையும் நோக்கத்தையும் நிறைவேற்றிக் கொள்ளவில்லை என்றே கூற வேண்டும். அந்நோக்கத்தை அடைய, இன்றும் பெண்ணியம் புதிய கூறுகளைக் கோட்பாடாகவும் சிந்தனைகளாகவும் உருவாக்கிப் பெண்ணின் சமகாலப் பிரச்சனைகளையும் அதற்கான காரணகாரியங்களையும் பேசிக் கொண்டே இருக்கிறது.மேலும்,பெண்ணியம் பற்றிய சரியான புரிதல் இல்லாத தமிழ்ச்சூழலில் நிலையான பெண்ணியக் கோட்பாடுகள் நூல்களாக வெளிவந்து கொண்டிருக்கிருக்கின்றன. அவ்வகையில் பெண்ணியம் கோட்பாடாக வளர்ந்த நிலையும், தற்காலப் பெண்ணியக் கோட்பாட்டுச் சிந்தனைகள் மீமொழி சிறுகதையுடன் பொருந்திப் புதிய பெண்ணியச் சிந்தனைகளை விளக்கும் வகையில் அமைந்துள்ளமையை இனம் காண்பதும் கட்டுரையின் நோக்கமாக அமைகிறது.*

**குறிப்புச்சொற்கள்:** *மீமொழி* சிறுகதை, பெண்ணியக் கோட்பாட்டு, பெண்ணியச் சிந்தனைகள்.

## முன்னுரை

பெண்ணியம் என்பது பெண்களை இழிவாகவும், சுயமற்றவர்களாகவும், வெறுப்புக்குரிய இடமாகவும், பலவீனமானவர்களாகவும் கருதும் சமுதாயத்திற்கு எதிராகக் குரல் கொடுக்கும் அரசியல் எனவும் கூறலாம். இருப்பினும், பல்லாண்டுகளாகப் பேசப்பட்டு வரும் பெண்ணியக் கோட்பாடு, தமிழ்ச்சமூகத்தில் எந்தவிதத் தாக்கத்தையும் ஏற்படுத்தவில்லை என்பது பொதுவான கருத்து. இக்கருத்து பெண்ணியத்தையும்,பெண்சமூகத்தையும் அறியாத, முழுவதுமாகப் புரிந்துகொள்ளாதாரின் கூற்றென்றே கூற வேண்டும்.

## பெண்ணியம் எனும் கோட்பாடு

பெண்ணியம் என்பது **பெண்ணை 'ஓர் உயிரி 'எனச் சமூகம் அங்கீகரித்து அவளுக்கு ஆணுக்குச் சமமான உரிமையும் சுதந்திரமும் கொடுக்கத் தூண்டும் கொள்கையாகும் (பெண்ணிய அணுகுமுறைகள், பக். 19)** என்பர். அதாவது, பெண்ணியம் என்பது பெண் தன்னைத்தானே நிறுவிக் கொள்ளுதல் என்பதாகும். **பெண்ணியம் எனும் கோட்பாடு பெண்களுக்கான சமத்துவம்,பெண்களுக்கான விடுதலை என்னும் நோக்கங்களை**

**Volume 1, SPL 1, April 2024** **E-ISSN – 2584-167X**

**முன்வைக்கும் ஒரு அரசியல் கோட்பாடாகும். (பெண்- பெண்ணியம்- பெண்நிலை, பக். 23)** தொடக்கத்தினின்று இன்றுவரை பல்வேறு கருத்தாக்கங்களைப் பின்பற்றி அரசியல் கோட்பாடாக உருவெடுத்துள்ளது.

> **பெண்ணியம் என்ற கோட்பாடு பெண்களைப் பற்றிய சிந்தனை ஆகும். பெண்ணியம், பெண்கள் மீதான வரலாறு, மத, பொருளாதாரப் பண்பாட்டுரீதியான ஒடுக்குமுறையின் அகநிலை உண்மைகளை ஆராய்வது. பெண்கள் மீதான ஒடுக்குமுறையின் பல்வேறு பரிணாமங்கள், அதற்கான தீர்வுகள், அதை அடைவதற்கான வழிமுறைகள் இவற்றை ஆராய்வது ஆகும். (பிரபஞ்சன் நாவல்களில் பெண்ணியச் சிந்தனைகள், பக். 8)**

என்ற விளக்கம் பெண்ணியத்தின் அடிப்படையைக் கூறுகிறது. பெண்ணியம் எனும் கோட்பாட்டின் விளக்கங்கள் அதன் வளர்ச்சிப் போக்கைக் காட்டுகிறது. பெண்ணின வளர்ச்சிக்கான கருத்தமைவுகள் ஒருபுறம் அமைய,

> **பெண் ஆணின் தேவைகளை நிறைவேற்றும் அடிமை; அழகாக இருக்க வேண்டியவள்; போகப்பொருள்; ஆணின் வருமானத்தில் வயிறு வளர்ப்பவள்; சமூக உற்பத்தி இயந்திரம்; வலுவற்றவள்; மென்மையானவள்; ஆண்களின் மனதைச் சஞ்சலப்பட வைப்பவள்; ஆண் வீடுபேறு அடையத் தடையாக இருப்பவள்; பாதுகாக்கப்பட வேண்டியவள்; வீடே அவளுக்கு எல்லை. (மேலது, பக். 19)**

என்கிறார், க.ஜெகதீஸ்வரி. இப்படி அனைத்து வகையான எதிர்மறைகளையும் பெண்பற்றிய கருத்தியலாக இலக்கியங்கள் கூறியுள்ளன.

Feminism என்று சொல்லப்படும் பெண்நிலைவாதமானது மேற்கூறிய இலக்கியக் கருத்தியல்களை விவாதத்திற்கு உள்ளாக்குகிறது.பெண்ணியச் சிந்தனை ஒட்டுமொத்த மனித சமுதாயத்தின் பகுத்தறிவு அனைத்தையும் மறுபரிசீலனைக்கு உட்படுத்த முனைகிறது. மேலும், 'சமதர்மமான சமுதாயம் வேண்டிய நோக்கிலும், பெண்ணின மேம்பாட்டை விரும்பும் நோக்கிலும், தனிமனித சுதந்திரத்தைப் போற்றும் நிலையிலும்' பெண்ணியச் சிந்தனை தோன்றி வளர்ந்தது எனலாம்.

**மேனாடுகளில் பெண்ணியச் சிந்தனைகள்**

ஐரோப்பா போன்ற மேற்கத்திய நாடுகளில் ' வேளாண் சமூக அமைப்பு ' தோற்றம் பெற்ற காலத்தில் பெண்ணியச் சிந்தனைகள் ஒரு மாற்றமாக உருக்கொண்டது. பெண்கள் தனக்கான சொத்துரிமையைச் சட்டரீதியில் பெறுவதற்கான வழிமுறைகளே அங்கு பெண்ணியச் சிந்தனைக்கு வித்திட்டது.

> **மேற்கத்தியப் பெண்ணியம் மிகத் தீவிரமடைந்தது. அப்பொழுது பெண்ணியவாதிகள் நான்கு பிரிவாகப் பிரிந்து போராடினர். சட்டச் சீர்திருத்தங்கள் வாயிலாக பெண்ணுரிமைகளைப் பெறலாமென்று நம்பியவர்கள் மிதவாதப் பெண்ணியவாதிகள், சமூகப் பொருளாதாரப் பண்பாட்டு நிலைகளால் பெண்ணடிமைத் தனம் நிலவுவதாக நினைப்பவர்கள் சமதர்மப் பெண்ணியவாதிகள், சமூகக் கட்டமைப்பை எதிர்த்துப்**

**போராடிய சமூகப் பெண்ணியவாதிகள்,ஆண்களே பெண்களின் துயரங்களுக்குக் காரணம் என நம்பியவர்கள் தீவிரப் பெண்ணியவாதிகள் என்று அழைக்கப்பட்டனர். (இந்துப் பெண்ணியம், பக். 1)**

மேற்சுட்டிய பெண்ணியவாதிகளின் பாகுபாடானது மேற்கத்தியப் பெண்ணியச் சிந்தனையின் நுட்பத்தையும், சிந்தனைவீச்சையும் புரிந்துகொள்ள வழியமைக்கும். இதுவே இந்தியப் பெண்ணியத்திற்கும் அடிப்படை எனலாம். அமெரிக்காவில் பெண்ணியச் சிந்தனை என்பது அவர்களின் வாழ்வியல் சிக்கல்களை மையமிட்ட தேசிய இயக்கமாக செயல்பட்டது. பின்பு அவ்வியக்கமும் வலுவிழந்தன. இங்கிலாந்தில் பெண்ணியச் சிந்தனையானது மேற்கத்திய மற்றும் அமெரிக்கப் பெண்ணியச் சிந்தனையிலிருந்து முன்னேறிய ஒன்றாகப் பார்க்கப்படுகிறது. குடும்ப வேலை செய்வதற்கான ஊதியம், கருக்கலைப்புச் சுதந்திரம் என்று தங்களின் தனித்தன்மையை நிலைநாட்டவே இங்கிலாந்தின் பெண்ணிய இயக்கங்கள் குரல்கொடுத்தன. இது மற்ற நாட்டு பெண்ணியச் சிந்தனைகளால் தவறெனச் சுட்டப்பட்டது.

**இந்தியப் பெண்ணியம்**

ஆசியா போன்ற கிழக்கிந்திய நாடுகளில் பெண்ணியம் குறித்த சிந்தனைகள் தொடக்கத்தில் வளரவில்லை. சாதி, மதப் பிரிவினைகளும், சமய, சாஸ்திரங்களும் பெண்ணியச் சிந்தனை வளர்ச்சிக்குப் பெரும் தடையாகவும் அதுவே பெண்களின் ஒடுக்குமுறைக்கு ஆணிவேராகவும் இருந்தது. இந்த முரண்பாட்டுச் சிக்கலை இந்தியப் பெண்ணியவாதிகள் புரிந்துகொள்ளவே தாமதமானது என்பதையும் குறிப்பிட்டாக வேண்டும்.

**இந்தியப் பெண்ணியம் சாதி மதத்தையும் பார்க்க வேண்டியிருக்கிறது. இதனால் பெண்சிக்கல்கள் இங்கு எப்போதுமே சமூகச் சிக்கல்களாகவே மாறுகின்றன. (மேலது, பக். 17)**

என்று க.பரிமளம் கூறுவது கவனிக்கத்தக்கது. இந்த வகையில் இந்திய மற்றும் தமிழ்ச் சூழலில் பெண்ணியம் காலந்தோறும் சமூகத்தை மையமிட்டதாகவே அமைந்துள்ளது. சமூகத்தில் ஏற்படும் ஒரு சிக்கல் எல்லாவகையிலும் பெண்சமுதாயத்திற்குப் பாதிப்பை விளைவித்தே செல்கிறது என்பதை உணரவேண்டியதும் அவசியமாகும்.

**பெண்கள் முதலில் பெண்கள் என்ற மதிப்புகளின் அடிப்படையில்தான் பயப்படுகின்றனர். பின்புதான், 'மனிதர்கள்'என்ற அடிப்படையில் உணரப்படுகின்றனர். (பெண்ணிய தோற்றமும் வளர்ச்சியும், பக். 60)**

சமூகத்தின் அங்கமான பெண்ணை,அச்சமூகம் விரும்பிய பெண்ணாகவே வழிநடத்த விரும்புகிறது. 'பாதுகாப்பு என்பது பெண்ணுக்கு அவசியம்' என்றுகூறி அடிப்படையில் அடிமைப்புத்தியை உணர்வுப்பூர்வமாகப் பெண்ணுக்குள்ளேயே நுழைத்துள்ளது, ஆண்நாயகச் சமூகம். பொதுவாகவே, ஒரு பெண்ணுக்கான மதிப்பு என்பது காலங்காலமாக ஆணின் கட்டுப்பாட்டுக்குள் , ஆளுமைக்குள் அடங்கியிருத்தலாகும்.

Academic Research News
*Peer-Reviewed Journal*

**Volume 1, SPL 1, April 2024** **E-ISSN – 2584-167X**

பெண்ணியம் என்பது பெண்ணியச் சிந்தனைகள் மற்றும் அவர்களின் வாழ்வியல் சிக்கல்களை மையமாகக் கொண்டு நான்காகப் பகுக்கப்படுகிறது. அவை,

**1. மிதவாதப் பெண்ணியம்**

**2. மார்க்சியப் பெண்ணியம்**

**3. சோசலிஷப் பெண்ணியம்**

**4. தீவிரவாதப் பெண்ணியம்**

என்ற வகையில் அமைகிறது. இவற்றுள் மிதவாதப் பெண்ணியம் என்பது பெண்ணியம் குறித்த சிந்தனைக்கான தூண்டுதலாக அமைந்தது. சோசலிஷப் பெண்ணியம் பெண்ணியக் கருத்துகளைச் சமூகத்தோடு இணைத்துப் பேச முயன்றது. மார்க்சியப் பெண்ணியம் சோசலிஷத்தைவிட முன்னேறி, பெண்ணியத்தையும் மார்க்சியத்தையும் நெருங்கிய முறையில் இணைந்தது. தீவிரவாதப் பெண்ணியம் பெண்ணியச் சிந்தனைகளின் போக்கை வேறுகட்டத்திற்குக் கொண்டு சென்றதோடு, மிகத் தீவிரமாக அதுகுறித்த கருத்தாக்கங்களை எல்லாநிலைகளிலும் பேசிக் கொண்டிருக்கிறது. மேலும், மகளிர் முன்னேற்றப் பெண்ணியம், கூட்டுசேராப் பெண்ணியம் போன்ற பல வகைகளும் பெண்களின் சிக்கல்களை வெவ்வேறு தளங்களில் பேசுவதற்காக இந்தியாவிலும் உருவாயின.

**பழந்தமிழ் இலக்கியங்களில் பெண்ணியச் சிந்தனைகள்**

உலகளவிலும் இந்தியாவிலும் 'பெண்ணியம்' எனும் கோட்பாட்டின் அடிப்படையில் சிந்தனைகள் வளரும் முன்னரே பழந்தமிழ் இலக்கியங்களில் ஏராளமான பெண்ணியச் சிந்தனைகள் ஆணாதிக்கச் சமுதாயநிலையில் தோன்றியிருந்தன.

**அச்சமும் நாணும் மடனும் முந்துறுதல்**

**நிச்சமும் பெண்பாற்கு உரிய என்ப (தொல்.பொருள். களவியல். நூ. 96)**

என்பது பழந்தமிழ் இலக்கணநூலான தொல்காப்பியத்தில் இடம்பெற்றுள்ள பெண்ணியச் சிந்தனை. அதனைத் தொடர்ந்து தொல்காப்பிய இலக்கணங்களைப் பின்பற்றி இயற்றப்பட்ட சங்கச் செய்யுள்கள் தலைவியாகிய பெண்ணை, பேசா மடந்தையாகவும்,தோழியாகிய பெண்ணைத் தலைமைப் பண்பு மிக்கவளாகவும் காட்சிப்படுத்தியது. நற்றாய் மற்றும் செவிலிமூலம் தாய்மைக் குணத்தை மேம்படுத்திக் கூறின. இவற்றுள் பெரும்பாலானவை ஆண்நாயகச் சமூகத்தின் புனைவுகளே.

**தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்**

**பெய்யெனப் பெய்யும் மழை**

**பெண்ணின் பெருந்தக்க யாவுள கற்புஎன்னும்**

**திண்மை உண்டாகப் பெறின் (திருக்குறள் பழைய உரை, குறள் - 54, 55, பக். 21)**

என்று பெண்ணுக்குக் கற்புவாழ்வு வேண்டுமென்கிறது. திருக்குறள். பிற அறநூல்கள் பெண்ணை இழிவாகப் பேசி, வெறுத்து ஒதுக்கின.

Volume 1, SPL 1, April 2024 E-ISSN – 2584-167X

பெண் என்று இருந்தால் அவள் எது செய்தாலும் செய்யாவிட்டாலும் ஆணுக்கானவனாய் வழங்குவதற்கான ஒன்றாக நிகழ்ந்துவிட வேண்டிய நுண்ணிய வழிமுறைகளில் சாதுரியமான முறைகளில் ஆணாதிக்கம் செயல்படுகின்றது. (திலகபாமா, இலக்கியத்தில் பெண்கள், கட்டுரை, தி ஹிந்து) நம் பழந்தமிழ் இலக்கியங்களிலெல்லாம் இத்தகைய நுண்ணிய அரசியலே ஊடுருவியுள்ளது.

பக்தி இலக்கியங்களில் சைவம் வைணவம் பெண்சமுதாயத்தையும் பெண்ணியத்தையும் பெரிதும் போற்றவுமில்லை அதேசமயம் தூற்றவுமில்லை. பிற்காலத்தில் அதே கடவுளும் பக்தியும் பெண்ணைத் 'தீட்டு' என்ற பெயரில் பெரிதும் ஒதுக்கி வைத்தன. இது ஆராய்வதற்குரிய ஒன்றாகும். காப்பியங்களில் தமிழின் முதற்காப்பியமான சிலம்பும் 'கற்பு' என்ற பெண்ணியக் கோட்பாட்டைக் கொண்டு கண்ணகியைக் கணவனுக்கு அடிமையாகவும், மாதவியைக் 'கணிகையர் குலம்' என்றும் காட்சிப்படுத்தும் அரசியலுண்டு. மேலும், கணவனைத் தெய்வமாகத் தொழும் பெண்ணுக்கும் தெய்வ அந்தஸ்து உண்டு என்று உள்ளார்ந்த பெண்ணடிமைத்தனத்தை ஆதரிக்கும் போக்கை அறியலாம். இருப்பினும், சமண அற நூல்கள் பெண்ணைப் புறந்தள்ளியபோதும், காப்பியக் கால சமண மற்றும் பௌத்தக் காப்பியங்கள் பெண்ணைத் தலைவியாகக் கொண்டு படைப்புகளைத் தந்தது. இது பெண்ணைப் புனிதம் என்ற பெயரில் அடிமைப்படுத்திய நிலையினைக் காட்டும்.

இன்றைய நவீன இலக்கியங்களில் பெண்ணியமும் பெண்ணியச் சிந்தனைகளும் பெருமளவு படைப்பாளர்களிடையே பேசப்பட்டு வந்தாலும், சமூகத்தில் பெண்ணுக்கான இடம் தரப்படவில்லை. ஒருவகையில் முன்னேறும் பெண்களை, மற்றொருவகையில் உடலாலும் உணர்வாலும் ஒடுக்கும் செயல்பாடுகள் சமூகத்தில் இன்றுவரை தொடர்ந்து வருகிறது. இவற்றை உணர்ந்த பெண்ணியப் படைப்பாளர்கள், பெண்ணியப் பேசுபொருளில் சிந்தனை மாற்றத்தைக் கொண்டு வந்தனர். ஆண்நாயகத்தை முற்றிலும் புறக்கணிக்கும் நோக்கில் பெண்மொழி, பெண்ணுடல் அரசியல், பெண்மைய விமர்சனம், பெண் எழுத்து, பெண் உடல்மொழி எனப் பல்வேறு புதிய பெண்ணியக் கூறுகளையும் தங்கள் படைப்புகளில் அறிமுகம் செய்தனர். அவற்றுள் இலக்கிய மொழியிலிருந்து ஆணாதிக்கப் போக்கைக் களையவே பெண்மொழி உருவானது. தற்காலத்தில் முழுக்க முழுக்க, அனைத்துப் பெண்ணியச் சிந்தனைகளும் ஆணாதிக்கம் புகாதவகையில் பெண்ணிய விமர்சனங்கள் இடம்பெறும் கோட்பாடுகளாக உருவாகி வருகின்றன.

**சிறுகதைகளில் பெண்ணியச் சிந்தனைகள்**

> **பெண்ணியம் ஆணாதிக்கத்தைஒழித்துப் பெண் ஆதிக்கத்தை நிலைநிறுத்துவது அன்று. ஆணின் உரிமைகளை ஏற்பது. எனவே ஆணாதிக்கத்தை ஒதுக்கிய ஆணும் பெண்ணும் சம உரிமையுடன் இணைந்து வாழ்வதாகிய இல்லற வாழ்வும் சமூக வாழ்வும் பெண்ணியத்தின் கோட்பாடாகும். (தமிழ் சிறுகதைகளில் பாலின வேறுபாடும் பெண் அடிமைத்தனமும் , பக். 33)**

**Volume 1, SPL 1, April 2024** **E-ISSN – 2584-167X**

மேற்கூறிய வரையறைப்படியே தமிழ்ச்சூழலில் தொடக்கத்தில் பெண்ணியம் பற்றிய சிறுகதைகளின் கருப்பொருள் அமைவுற்றது.

பெரும்பாலும்,பெண்களின் குடும்பச் சிக்கல்களையே வெளிப்படுத்துவனவாக இருந்தன. கணவன் ஒழுக்கம் தவறினால் எதிர்க்காமல், அவனுக்கு அடங்கிச் செல்வதே மனைவிக்குரிய பண்பு என்ற சமூகப்பார்வையை, **ஒரு குடும்பப்பொண்ணு புருஷனுக்கு அடங்கிப் போறதைத் தவிர வேறே என்ன பண்ண முடியும் சொல்லு… (தங்க முலாம் பூசிய நகரங்கள், பக். 13)** என்ற ஆனந்த கிருஷ்ணமூர்த்தியின் சிறுகதைப் பகுதி ஒன்றில் காணலாம். இதுபோல குடும்பத்தில் பெண்களுக்கு ஏற்படும் ஒடுக்குமுறைகளை ஆரம்பகால சிறுகதைகள் விழுமியங்களாக்கின. பெண்ணுக்குரிய விழுமியங்களைச் சமூக விழுமியமாக மாற்றும் அரசியல் சிறுகதைகளில் காட்சிப்படுத்தப்பட்டது.

சிறிது சிறிதாக பெண்களின் உணர்வுகளை வெளிக்கொணரும் கதைகள் பெரும்பாலும் பெண்ணியப் படைப்பாளர்களால் படைக்கப்பட்டன. ஆரம்பகாலக் கதைகளை எதிர்க்கும் நிலையில் அம்பை போன்ற பெண்ணியப் படைப்பாளர்கள் சமூகக் கருத்தாக்கங்களை மாற்றும் முயற்சியில் சிறுகதைகளைப் படைத்தனர். 'பெண்ணும் சகமனிதப்பிறவி, அவள் சமுதாயத்தில் ஆணுக்கு இணையாக நடத்தப்பட வேண்டும்' என்றும் தமது படைப்புகளில் சித்தரித்தனர். இராஜம் கிருஷ்ணன் போன்ற புரட்சிகரப் பெண்ணியப் படைப்பாளர்களைத் தொடர்நது தற்போது மாலதி மைத்ரி, சுகிர்தராணி போன்றோர் தீவிரப் பெண்ணியக் கருத்துகளைப் பின்பற்றுகின்றனர். இவர்கள் தங்கள் கதைகளில் தற்காலப் பெண்ணியக் கோட்பாட்டுச் சிந்தனைகளைப் புகுத்தி எழுதி வருகின்றனர். இவ்வரிசையில் கவிஞர் குட்டி ரேவதி அவர்கள் நிறைய அறைகள் உள்ள வீடு, விரல்கள், மீமொழி போன்ற சிறுகதைத் தொகுப்புகளைப் படைத்துள்ளார். அவ்வகையில் மீமொழி சிறுகதைத் தொகுப்பு , பெண்மொழி, உடல்மொழி,உடல் அரசியல் ஆகிய பெண்மைய விமர்சனக் கூறுகள் மற்றும் பெண் உடல் அரசியல் போன்ற பெண்ணியக் கோட்பாட்டுகள் அடங்கிய சிந்தனைகளை, சிறுகதைகளுடன் இணைத்துப் பேசுகிறது.

**மீமொழி - பெண்ணியக் கோட்பாட்டுச் சிந்தனைகள்**

'மீமொழி சிறுகதைகள்' (2020) என்ற குட்டி ரேவதியின் புனைவானது பத்து சிறுகதைகள் அடங்கிய தொகுப்பாகும். 1. முழுமதி 2. கந்தகப்பூ 3. கற்பூரம் 4. கண்கள் 5. அமிலம் 6. மீமொழி 7. மலையாகி நிற்றல் 8. தூமலர் 9. திசைமானி 10. கடலும் கரையும் ஆகியனவாகும். கேரளப் பல்கலைக்கழகப் பேராசிரியர் த.விஜயலட்சுமி அவர்களின் பெண்-பெண்ணியம்-பெண்நிலை (பெண்ணியக் கோட்பாடுகள் - 2020) எனும் நூலில் இடம்பெற்றுள்ள புதிய பெண்ணியச் சிந்தனைக் கோட்பாடுகள் சிறப்பானவை. இக்கோட்பாடுகளைக் குட்டி ரேவதி அவர்களின் மீமொழி சிறுகதைப் புனைவுகளோடு பொருத்திப் பார்க்கப் பெண்ணியச் சிந்தனைப் போக்கின் வளர்ச்சியினை இனங்கண்டுகொள்ள முடிகின்றது.

Academic Research News

*Peer-Reviewed Journal*



**Volume 1, SPL 1, April 2024** **E-ISSN – 2584-167X**

**பெண் மைய விமர்சனம்**

பெண் மைய விமர்சனம் முதன்மையான கோட்பாடாகும். **பெண் மைய விமர்சனம் என்பது பெண்கள் உருவாக்கிய, பெண்கள் எழுதிய படைப்புகளில் பெண்களின் நிலையைப் பெண்களே விமர்சகர்களாக அணுகி ஆய்வு செய்வதாகும். (பெண்-பெண்ணியம்-பெண்நிலை, பக். 115)** இதன் தனித்தன்மை 'படைப்பாளியும் விமர்சகரும் பெண்' என்பதோடு 'பெண்கள் நனவிலி நிலையில் அவர்களைப் பற்றி என்ன உணருகிறார்கள்' என்ற எதார்த்தத்தை வெளிக்கொணர பெண்மைய விமர்சனம் மிகவும் பயனுடையதாகும். பெண்மைய விமர்சனத்தில் பெண்படைப்பாளர்கள் தாங்கள் படைக்கும் பாத்திரங்களை மரபான தன்மையிலிருந்து மாற்றிப் படைத்தலும், பெண்ணுக்கான சுயகண்டுபிடிப்புக்கான ஒரு உத்தியைப் பயன்படுத்தலும் நிகழுகிறது.

**மரபான தன்மையை மாற்றுதல்**

1) 'தான்' என்ற உணர்வில் பாத்திரங்களைப் படைத்தல் (Reflexive perception). அதாவது, பெண்கள் படைக்கும் பாத்திரங்களில் தனது சுயத்தைத் ‘தானே தான்’ அந்தப் பாத்திரம் என்ற நிலையில் படைத்தலாகும். மீமொழியின் 'கண்கள்' சிறுகதையில் வரும் எழுத்தாளராகிய பெண்பாத்திரம் தன் வாழ்வின் ஒரு நிகழ்வைப் பகிர்ந்ததைப் போல 'தானே தான் அந்தப் பாத்திரம் ' என்று கூறுவது போன்ற உணர்வை வாசகருக்குத் தரும். தன்னையும் படைப்போடு இணைக்கும் செயல் இக்கதையின்மூலம் நடைபெற்றுள்ளது. பிரதிக்கும் படைப்பாளனுக்குமான நெருக்கத்தை இக்கதை அதிகரிப்பதாகவுள்ளது.

2) தலைகீழாக்குதல் (Inversion) என்பது மரபான பெண் பிம்பங்களைப் புனைவுகளில் தலைகீழாக்கி எதிர்மறையான பாத்திரமாக மாற்றுதல் என்ற இருவகைகளில் அமைகிறது. சான்றாக, "மீமொழி" சிறுகதையில் வரும் 'முத்தம்மா' பாத்திரம், 'புலிக்குட்டி' என்ற ஆடவரோடு வலுக்கட்டாயமாக உடலிணைவு மூலம் அவள் காதலை நிரூபித்து, வாழ்க்கைத் துணையாக வாழ்கிறாள். அதீத, கற்பனைக்கு அப்பாற்பட்ட, மரபுப் பெண்ணியவாதிகள் ஏற்றுக்கொள்ளவே இயலாத பெண்பிம்பத்தை இக்கதையில் ரேவதி சித்தரித்துள்ளார். பெண் தான் விரும்பியதை அடைய எந்த எல்லையையும் கடக்கலாம் என்பதை இச்சிறுகதை உணர்த்த முயல்கிறது. எல்லா நிலைகளிலும் ஆணுக்கு அவனது ஆசைக்கு இணங்கிய பெண் பாத்திரங்களைக் கொண்ட மரபான கதைகளைத் தலைகீழாக்கம் செய்துள்ளது 'மீமொழி' என்னும் சிறுகதை. மேலும், நம் சமூகத்தில் பெண்கள் திருமணமின்றித் தனித்து வாழ்வது மரபை மீறிய செயலாகவே இன்றைய நிலையிலும் பார்க்கப்படுகிறது. அவ்வகையில் 'மலையாகிநிற்றல்' சிறுகதையில் வரும் 'மாரி' என்ற பெண் பாத்திரம் மரபுத்தன்மையை மீறிய நிலையிலுள்ளது.

3) திரும்ப எழுதுதல்(Rewriting) எனும் கூறானது ஏற்கனவே உள்ள பெண்பாத்திரங்களை எடுத்து அதன் பண்புகளில் சில மாற்றங்கள் செய்து திரும்பத் தமது படைப்பில் படைத்துக் காட்டுவதாகும். இதில் படைப்பாளர் ஒரே பாத்திரத்தை வெவ்வேறு

Volume 1, SPL 1, April 2024 E-ISSN – 2584-167X

கோணங்களில் பார்க்கும் தன்மையை நாம் தெரிந்து கொள்ளலாம். ஆசிரியர் இக்கூற்றைக் கற்பூரம் என்ற சிறுகதையிலும், அமிலம் என்ற சிறுகதையிலும் கையாண்டுள்ளார். அதாவது, கற்பூரம் எனும் பெண் இளம் வயதிலேயே கணவனை இழந்து பிள்ளைகளை வளர்த்து ஆளாக்கிய பிறகு அப்பிள்ளைகளாலேயே துன்புறுத்தப்பட்டு கைவிடப்பட்டு வயதான காலத்தில் வேறொரு துணையுடன் (ஆடவருடன்) வாழ்க்கை நடத்துகிறாள். ஆனால், அமிலம் சிறுகதையில் வரும் தயாமலர் கதாபாத்திரம் கற்பூரத்தின் சூழலையே அடைகிறாள். இருப்பினும், வேறு துணையை நாடாது தனித்த வாழ்வை வாழ்கிறாள். இவ்வாறு சமூகம் விரும்புவதும் இயல்பாக ஒரு பெண் விரும்புவதுமாகிய இருநிலைகள் ஆசிரியரால் சித்தரிக்கப்பட்டுள்ளது.

4) சிதைவாக்கம் செய்வது என்பது காலங்காலமாகப் பின்பற்றப்பட்டு வந்த எந்த ஒன்றையும் அழிக்க முற்படுதலாகும். அழித்தலே இதன் பிரதானம் எனலாம். இச்சிறுகதைத் தொகுப்பில் இடம்பெறும் பெரும்பாலான கதைகள் பெண்ணுக்கான மறுக்கப்பட்ட காம விருப்புகளைக் கட்டவிழ்த்து, காமத்தின் மீது குறிப்பாக பெண்ணுக்கான காமத்தின்மீது கட்டப்பட்டிருந்த தொன்மையான மதிப்பீடுகளைச் சிதைக்கும் வண்ணம் படைக்கப்பட்டுள்ளன. கற்பூரம்,முத்தம்மாள் ,முழுமதி போன்ற பாத்திரங்களை உதாரணமாகக் கொள்ளலாம்.

5) மீளாக்கம் செய்வது என்பது முன்பு செயல்பாட்டில் இருந்து மறைந்துவிட்ட ஒன்றைத் திரும்பத் தற்போது மீண்டும் செயல்பாட்டுக்குக் கொண்டுவருதல் ஆகும். அந்தவகையில் ‘குறத்தி, ஆய்ச்சி, பரத்தி, நுளைச்சி, மறத்தி போன்ற சங்ககாலப் பெண்களின் நவீனக்குரல்களை மீமொழியின் கதைகள் எதிரொலிக்கின்றன. தொன்மத்தின் மீது நவீன மதிப்பீடுகளைச் செலுத்தி, மறுவாசிப்புக்கு உட்படுத்தும் பணியையும் இக்கதைகள் செய்கின்றன.’ மேற்கூறிய மதிப்பீடானது கதைகள் சொல்லக்கூடிய பொருண்மையுடனும் மீட்டுருவாக்கத்துடன் பொருந்தி அமைந்துள்ளன.

மேற்கூறிய புனைவு உத்திகளைப் பெண்ணிய நோக்கில் பெண் படைப்புகளில் பெண்விமர்சகர்களும், பெண்வாசகர்களும் தேடிக் கண்டடைவது நவீனக் கோட்பாட்டு அடிப்படையிலான பெண்ணியச் சிந்தனைகளைப் புரிந்துகொள்ள உதவும். இன்னும் இச்சிறுகதைகளை உற்றுநோக்குமிடத்து வேறு சிலகூறுகளும் வெகுவாகப் பொருந்திவருகின்றன.

1) புதியவகை மாதிரிகளைப் (role models) படைத்து உலவவிடுதல் –பெண்ணுக்கான வரைமுறைகளைக் கடந்து பல உரிமைகள் பெற்று அதை நடைமு றைப்படுத்தும் மேம்பட்ட பெண் பாத்திரங்களைப் படைத்தல்.

2) புதிய மதிப்பீடுகளை உருவாக்குதல் – பெண்ணுக்கான சமூக மதிப்பீடுகளைக் கேள்விக்குள்ளாக்கிப் புதிய விழுமியங்களை உருவாக்கி, இயல்பான பெண்ணின் மன உணர்வார்ந்த மதிப்பீடுகளை உருவாக்குதல்.

**Volume 1, SPL 1, April 2024** **E-ISSN – 2584-167X**

3) மரபுகளை உடைத்தல், மரபை மீறி அதிர்ச்சி ஊட்டுதல் போன்ற உத்திகளும் பெண் மைய விமர்சனத்திற்கான கூறுகள்.அவையும் மீமொழி சிறுகதைகளில் பொருந்தி அமைகின்றன. மீமொழி சிறுகதைப் புனைவுகளின் வழியாக அறியப்படும் பெண்மைய விமர்சனக் கோட்பாட்டின் கூறுகள் அனைத்தும் பெண்ணுக்கான மரபான கட்டமைப்புகளை உடைக்கும் நோக்கத்தையே அடிப்படையாகக் கொண்டுள்ளன.

**மீமொழி – பெண்ணுடலின் மொழி**

பெண் படைப்பாளர்கள் தற்காலத்தில் பெண்எழுத்து எனும் அரசியலையும் கையாண்டு வருகின்றனர். அவ்வகையில் பெண்ணுக்கான உடல்மொழி மற்றும் உடல் குறித்த அரசியலும் மீமொழி தொகுப்பில் பரவலாகப் பேசப்படுவதால் அது குறித்த சிந்தனைகளையும் விளக்க முடியும். 'இன்றைய தமிழ்ச் சூழலில் பெண் எழுத்துகள் பரவலாகி வரும் நிலையில்,

> **பெண்ணின் உடல் அவளுக்கானது’என்கிற எதார்த்தம் முன்வைக்கப்படுகிறது. பெண்ணை மனுசியாகப் பார்க்க மறுத்து, அவளை உடல் உறுப்புகளின் வழியாக, நுகர்வுக்கான ஒருபொருளாகப் பார்க்கும் ஆணாதிக்க எழுத்துகளுக்கு/ செயல்பாடுகளுக்கு மாற்றாக, பெண்ணும் நுகர்வோளாக மாறும் அரசியலைப் பெண்எழுத்து முன்வைக்கிறது. (பெண் எழுத்துக்களின் அரசியல், பக். 22 - 23)**

பெண் தன் உடலை எழுத வேண்டும், அவள் தன் சுய உணர்வுகளை அடையாளங்களைப் பண்பாட்டுப் போர்வையிலிருந்து விடுபட்ட நிலையில் எழுத்தில் கொணர வேண்டும். காலங்காலமாக ஆண்களின் பாலியல் நடத்தை, கட்டுப்பாடுகளுக்கு அப்பாற்பட்ட நிலையிலும், பெண்களின் பாலியல் வேட்கை, கற்பெனும் ஆணாதிக்கப் பண்பாட்டுச் சூழலுக்குள்ளும் அடங்கியுள்ளது. இருப்பினும், அவற்றைக் கட்டுடைக்கும் அரசியலும் ஒரிரு படைப்பாளர்களால் நடந்துள்ளது. அவற்றுள் முதலில் பெண்ணின் உடலியல் வேட்கையை ஔவை குறுந்தொகைப் பாடல் ஒன்றில் செய்யுள் எழுத்தாகப் பதிவிட்டுள்ளார். அப்பாடல்,

> **முட்டுவன் கொல் தாக்குவேன் கொல்**
> **ஓரேன், யானும் ஓர்பெற்றி மேலிட்டு**
> **ஆஅ ! ஒல் எனக் கூவுவேன் கொல்**
> **அலமரல் அசைவளி அலைப்பவென்**
> **உயவுநோ யறியாது துஞ்சும் ஊர்க்கே (குறுந்., பா. 28)**

இப்பாடலில் தலைவி தன் காம வேட்கையை வெளிப்படுத்துவதாக ஔவை, ஆணாதிக்க எதிர்ப்புக்குரலை எழுப்பியுள்ளார். எனவே, பெண்எழுத்து அரசியலின் முன்னோடியாக நாம் ஔவையைக் குறிப்பிடலாம். அந்தவரிசையில் குட்டிரேவதியின் மீமொழி சிறுகதைத் தொகுப்பும் பெண் எழுத்துகளாகிய உடல்மொழி மற்றும் உடலரசியலை வெகுவாகச் சித்தரித்துள்ளன. அந்தரங்கம் என்று ஆணாதிக்கப் பார்வையில் புனிதப்படுத்தப்பட்ட பெண்ணின் உடலும் உணர்வுகளும் கட்டுடைக்கப்பட வேண்டும் என்ற கருத்தியலும் இத்தொகுப்பில் உரையாடல்களாக முன்வைக்கப்பட்டுளளன.

Volume 1, SPL 1, April 2024 E-ISSN – 2584-167X

**உடல்மொழியும் உடலரசியலும்**

உடல்மொழி என்பது உடல் அசைவுகள் வழி சைகைகள் வழி கருத்தைப் பரிமாறுதல் என்றபோதிலும், பாலினம் சார்ந்து செயல்படும் அல்லது செயல்படுத்தப்பெறும் உடல்மொழியை பெண்ணியச் சிந்தனையாளர்கள் படைப்புகளில் தீவிரமாகச் செய்து வருகின்றனர். அதாவது, பாலின நோக்கில் பெண்ணுக்கே என்று ஒதுக்கப்பட்டுள்ள உடல்மொழியை, உடலியல் வேட்கை மறைப்புணர்வை உடைத்து அவற்றுக்கு மறுதலையான உடல் அசைவுகளையும் சைகைகளையும் பாத்திரங்களின் வழியாக நிறைவேற்றும் எழுத்தரசியல் இச்சிறுகதைப் புனைவில் அமைந்துள்ளது. உண்மையில் பெண்ணுடலைப் பண்பாட்டு வெளியிலிருந்து வெளிக்கொணரும் முயற்சியையே ரேவதி மேற்கொண்டுள்ளார். மேலும், தனக்கான ஒருமொழியை உருவாக்க வேண்டும் என்ற பெண்ணியலாளர்களின் வேண்டுகோளுக்கான முயற்சியை சிறுகதைப் புனைவில் கண்டெடுக்க முனைந்துள்ளார் குட்டிரேவதி என்று கூறுதலே பொருத்தம். **அகத்திணை மரபினையுடைய சங்ககாலம், திருமணத்துக்கு முன்பே உடலிணைதல் ஒழுக்க மீறலாகக் கருதப்படாத காலம். (சுப்பிரமணி இரமேஷ், கட்டுரை, இந்து தமிழ்த்திசை, அக்டோபர் 24, 2020)** அந்த அகமரபைச் சார்ந்த தலைவிகளினுடைய உடல்மொழியையே முழுமதி, கந்தகப்பூ, கண்கள், தூமலர், கடலும்கரையும் கதைகளின் மூலம் காண்கிறோம். ஔவை காட்டும் பாலியல் வேட்கையுடைய பல தலைவிகளைக் குட்டிரேவதி தன் சிறுகதைத் தொகுப்பில் சித்தரித்துக் காட்டியுள்ளதை வாசகர்கள் எளிதாக இனங்கண்டறியலாம்.

பெண்ணுடல் மீது கற்பிக்கப்பட இருந்த விலக்குகள், அசுத்தம், தீண்டாமை, புனிதத்தன்மை, இரகசியத்தன்மை போன்றவற்றைக் கட்டுடைத்து, பெண்ணியப் போராட்டத்திற்கான ஒரு ஆயுதமாக அதே உடலைப் பயன்படுத்துதல் என்னும் அரசியல் இதனுள் செயல்படுத்தப்படுகிறது. பெண்ணுக்கு அன்னியமான அவளது உடல் சார்ந்த உரிமைகளை இதன்மூலம் மீட்டெடுத்தல் என்ற நோக்கமும் செயல்பட்டுள்ளது.

> **சுயமற்ற வெறும் உடலாக மாற்றப்பட்ட பெண்பால் அந்த உடலை வைத்துத் தனது சுயத்தை மீட்டுருவாக்கும் முயற்சியின் பகுதியாகப் பெண்ணின் உடலைக் கொண்டாடுதல், பெண்ணின் உடலை எழுதும் வக்கிரங்கள், அசிங்கங்கள் என்ற கருத்தாக்கங்களை உடைத்து பெண்ணுடலைப் பகிரங்கப்படுத்துதல், அதனூடாகப் பொதுமனித நனவோட்டத்திலுள்ள பெண்ணுடல் குறித்த காலகாலமாக கட்டமைக்கப்பட்டுள்ள காமம்சார்ந்த, பாலியல்சார்ந்த புறப்பூச்சுகளை அகற்றுதல், மறுக்கப்பட்ட பெண்ணுக்கான காம விருப்புகளை, உணர்வுகளைப் பகிரங்கப் படுத்துதல், பெண்ணுடல் என்பது ஆணுடல் என்பதைப் போலவே சாதாரணமானது, இயல்பானது என்ற ஒரு புரிதலைச் சமூகத்தில் ஏற்படுத்துதல் என்று இவ்வாறு பலவகையான நோக்குகளைத் தன்னகத்தே கொண்ட ஒரு கருத்தாடலே உடலரசியல் (பெண்-பெண்ணியம்-பெண்நிலை, பக். 107)**

**Volume 1, SPL 1, April 2024** **E-ISSN – 2584-167X**

உடலரசியல் குறித்த விளக்கம் "மீமொழி" சிறுகதைத் தொகுப்பிற்குப் பெருமளவு பொருந்தி வருகிறது.

> **உடலெங்கும் இனிய உணர்வுகள் அலைகளைப் போல் எழும்பி அடங்கின. அதைத்தான் எல்லோரும் காமம் என்று சொல்கிறார்களா என்ற சந்தேகமும் முழுமதிக்கு வராமல் இல்லை (முழுமதி, ப.12)**

> **உடலின் பல்லாயிரம் உணர்ச்சிகளில் நான் திளைத்துக் கிடந்தேன் (கந்.பூ., ப. 26)**

ஒரு பெண் தன் உடல் குறித்து வெளிப்படையாகப் பேசுவதே தன் சுயத்தை அடைவதற்கான திறப்பு ஆகும் என்ற குட்டி ரேவதியின் எழுத்தரசியலால் தெரியவருகிறது. **உடம்புல ஒன்னுமில்ல. உடம்புக்குள்ள இருக்குற மனசுதான் எல்லாம் (கற்பூரம், ப. 32)** பெண்ணின் உடலை ஆணுடல்போல இயல்பானது, சாதாரணமானது என்று நிறுவும் வரிகள் இவை. காலங்காலமாகப் பெண்உடல் மீது உடைமைப் பொருளாக எண்ணப்பட்டு அதன்மீது நடத்தப்படும் வன்முறைகள் நிகழ்வதற்குக் காரணம் அதன் இரகசியம், பாதுகாப்பு என்ற சமூகக்கட்டுமானங்களே. அக்கட்டுமானங்களை உடைத்து, அவ்வுடலைப் பகிரங்கப்படுத்தும்போது ஆணின் உடல்போல பெண்ணின் உடலும் இயல்பாகவும், சாதாரணமாகவும் பார்க்கப்படும் என்பது உடலரசியல் கருத்தாக்கங்களைப் படைக்கும் படைப்பாளர்களின் கருத்தாக உள்ளதென்பதை உணர வேண்டும்.

**முடிவுரை**

தற்காலச் சூழலில் உரிமைகள் மற்றும் சுதந்திரம் கடந்து பெண்சமுதாயத்தின்மீது, அவ்வளர்ச்சியைத் தடைப்படுத்தும் வகையில் உடல்சார்ந்த ஒடுக்குதல் அதிகளவில் நிகழ்ந்துவருகிறது. எனவே, பெண்ணுடல் குறித்த சிந்தனைத் தெளிவும் புரிதலும் பெண்ணுக்கும் ஆணாதிக்கச் சிந்தனைப் போக்காளர்களுக்கும் அவசியம் எனும் நோக்கிலேயே பெண்ணுக்கான எழுத்தின்மூலம் உடல்மொழி மற்றும் உடலரசியல் கருத்தாக்கங்கள் முன் வைக்கப்படுகின்றன. குறிப்பாக, ஆணாதிக்கப் பண்பாட்டுச் சூழலில், ஆணின் பாலியல் வேட்கையும் தேவையும் மட்டுமே இதுவரை இலக்கியமாக்கப்பட்ட நிலையில், 'மீமொழி' சிறுகதைப் புனைவு பெண்ணுக்கான பாலியல் வேட்கை மற்றும் தேவையைப் பேசுகிறது. பாலியல் சுதந்திரம், உடல் பற்றிய சுதந்திர உணர்வு, ஆண்-பெண் சமநிலை உறவு போன்ற இன்றைய சமூகத்திற்குத் தேவையான பல பெண்ணியச் சிந்தனைகளும் கோட்பாடுகள் மூலம் விளக்கப்படுகின்றன. பெண்ணின் உடலை அவள் அனுமதியின்றி சிதைக்கும் சமூகத்தில், அந்த உடலை வைத்தே, தன் ஆசையை நிறைவேற்றிக் கொள்ளும் பாலியல் சுதந்திரத்திற்கான எழுத்து அரசியலை மீமொழி சிறுகதைத் தொகுப்பில் காணமுடிகிறது.

**துணைநூற்பட்டியல்**

[1] குட்டி ரேவதி. *மீமொழி சிறுகதைகள்*. எழுத்து பிரசுரம், அண்ணா நகர், சென்னை-40, முதல் பதிப்பு 2020.

**Volume 1, SPL 1, April 2024** **E-ISSN – 2584-167X**

[2] த.விஜயலட்சுமி. *பெண் - பெண்ணியம் - பெண் நிலை.* காலசகம் பதிப்பகம், நாகர்கோவில்-629 002 ,முதற்பதிப்பு நவம்பர் 2020.

[3] திருஞானசம்பந்தம். ச. *தொல்காப்பியம் பொருளதிகாரம் மூலமும் உரையும்.* கதிர் பதிப்பகம், திருவையாறு.

[4] வீ. நிர்மலா ராணி, *தமிழ்ச்சிறுகதைகளில் பாலின வேறுபாடும் பெண்ணடிமைத்தனமும்,* காவ்யா பதிப்பகம், 14, முதல் குறுக்குத்தெரு, டிரஸ்ட் புரம், கோடம்பாக்கம், சென்னை - 600024.

[5] ச. கிருஷ்ணமூர்த்தி, *திருக்குறள் பழைய உரை,* தமிழ்நாடு தொல்பொருள் ஆய்வுத்துறை, சென்னை – 600013, முதல் பதிப்பு – 1993.

[6] இரா.செல்வி, *பெண்மையச் சிந்தனைகள்,* காவியா பதிப்பகம், கோடம்பாக்கம் சென்னை - 600024, முதல் பதிப்பு – 2010.

[7] க.பரிமளம், *இந்து பெண்ணியம்,* காவியா பதிப்பகம், சென்னை - 024 ,முதற்பதிப்பு- 1998.

[8] இரா.பிரேமா, *பெண் எழுத்துகளின் அரசியல்,* பாவை பிரிண்டர்ஸ், சென்னை - 014, முதல் பதிப்பு - டிசம்பர் 2007.

[9] இரா.பிரேமா,*பெண்ணியம் அணுகுமுறைகள்,* தமிழ் புத்தகாலயம், 15 , மாசிலாமணி தெரு, பாண்டி பஜார், தியாகராய நகர், சென்னை - 600017 ,முதல் பதிப்பு - 1998 .

[10] க.ஜெகதீஸ்வரி, *பிரபஞ்சன் நாவல்களில் பெண்ணியச் சிந்தனைகள்,* முனைவர் பட்ட ஆய்வேடு, பி.எஸ்.ஜி கலை அறிவியல் கல்லூரி, கோவை, செப்டம்பர் - 2002.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி**: இல்லை

**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை

**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் **Creative Commons Attribution4.0** கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.